Journal Homepage: - www.journalijar.com

INTERNATIONAL JOURNAL OF ADVANCED RESEARCH (IJAR)

Article DOI: 10.21474/IJAR01/xxx
DOI URL: http://dx.doi.org/10.21474/IJAR01/xxx

ISSN NO. 2320-5407

*RESEARCH ARTICLE*

# அறம் வழியே திருவள்ளுவரும் புனித பவுலடியாரும்

**அ.பிரீத்தி மேரி சில்வியா, B.A., M.A., (பரதநாட்டியம்)**

********************

1. ஆய்வு நெறியாளர் முனைவர் ஜி.ஜே.லீமாரோஸ், உதவி பேராசிரியர், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 001.
2. புனித பவுலின் புதல்வியர் சபை, 32-33, வசந்த நகர், கருமண்டபம், திருச்சிராப்பள்ளி -620 001. தமிழ்நாடு.

……………………………………………………………………………………………….....

**Manuscript Info**

……………………..

***Manuscript History***
Received: 22 December 2021
Final Accepted: 01January 2022
Published: January 2022

***திறவுச் சொற்கள்:-***
புனித பவுல், திருவள்ளுவர், திருக்குறள், திருவிவிலியம், அறநெறி.

**ஆய்வுச்சுருக்கம்:-**

…………………………………………………………………

இக்கட்டுரையானது திருவள்ளுவரின் சிந்தனைக்கும் திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டின் ஓர் ஆசிரியரான பவுலடியாரின் சிந்தனைக்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறது. இருவரும் தங்களது வாழ்வின் அனுபவத்தின் மூலம் கற்றறிந்த உண்மைகளை தங்களது எழுத்துக்களின் மூலம் மக்களிடையே கொண்டு போய் சேர்த்தவர்கள். அவர்களின் போதனைகள் இன்றளவும் தனிமனித வாழ்விலும் சமுதாயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இருவருமே மாற்றத்தை கொண்டு வந்த புரட்சியாளர்கள்.

*Copy Right, IJAR, 2021,. All rights reserved.*

……………………………………………………………………………………………….....

## முன்னுரை: -

ஒவ்வொரு மனிதனும் தத்தம் நாட்டமைப்பு, சமூக அமைப்பு, மெய்யியல் பார்வைகள், வரலாற்று அனுபவங்கள், சூழ்நிலை மாற்றங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப தத்தம் பார்வைகளையும், கொள்கைகளையும் படைத்துள்ளான். (செல்லத்துரை, 2004) என்று ஒருவன் தனக்குண்டான குறுகிய பார்வையிலிருந்து வெளிவந்து, மற்ற இனத்தவரின் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் என்று கற்கிறானோ அப்போது தம் பார்வையையும், எண்ணங்களையும் விரிவாக்கிக் கொள்கிறான். இவ்வாறு முயலும் போது பல வேளைகளில் தம் சொந்த கலை, இலக்கியங்களில் புதைந்துள்ள அரிய பொக்கிஷங்களை கண்டுணர்கிறான். இவ்வாறு தேடலில் ஈடுபடும் போது பல மேற்கத்திய எழுத்தாளர்களின் சிந்தனைகளும், நம் தமிழ் இலக்கிய சிந்தனைகளும் ஒன்றித்திருப்பதைக் இருப்பதைக் காணலாம்.

### திருக்குறள் :

திருக்குறள் உலகப் புகழ் பெற்ற பொதுமறை. இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் அழகாக எடுத்துரைக்கிறது. வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் எடுத்துரைக்கும் ஒரு சிறந்த வாழ்வியல் நூலாகும். சாதி,மதம், மொழி, நாடு என்று வேறுபாடு இல்லாமல் மக்கள் அனைவருக்கும் பொருந்துவதாக உள்ளதால் இது உலக பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. (இரா.நாராயணசாமி, 1997). திருக்குறளில் 133 அதிகாரமும், அதிகாரத்துக்கு 10 குறள்களும் என மொத்தம் 1330 குறள்களும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு குறளும் இரண்டு

**Corresponding Author:-** A. Preethi Mary Silviya, B.A., M.A., (Bharathanatyam)
Address:- Daughters of St. Paul, 32-33, Vasanth Nagar, Karumandapam, Trichy, Tamil Nadu.

அடிகளையும் ஏழு சீரும் கொண்ட வெண்பாவாகும். இந்நூலில் பெரும் பிரிவு பால் எனவும், சிறு பிரிவு இயல் எனவும், அதனினும் சிறியது அதிகாரம் எனவும் வகுக்க பெற்றுள்ளது.

**அறத்துப்பால்**

- பாயிரவியல் - அதிகாரம் 4, குறள் 40.
- இல்லறவியல் - அதிகாரம் 20, குறள் 200.
- துறவறவியல் - அதிகாரம் 13, குறள் 130.
- ஊழியல் - அதிகாரம் 1, குறள் 10.

**பொருட்பால்**

- அரசியல் - அதிகாரம் 25, குறள் 250
- அமைச்சியல் - அதிகாரம் 10, குறள் 100.
- அங்கவியல் - அதிகாரம் 22, குறள் 220
- ஓழிபியல் - அதிகாரம் 13, குறள் 130.

**காமத்துப்பால்**

- களவியல் - அதிகாரம் 7, குறள் 70.
- கற்பியல் - அதிகாரம் 18, குறள் 180, (இரா.நாராயணசாமி, 1997).

**திருவிவிலியம்**

பல்வேறு காலக்கட்டத்தில் இறைவன் வெளிப்படுத்தியதை இறைத்தூண்டுதலால் பல்வேறு மனிதர்கள் எழுதிய தொகுப்பே விவிலியம். பாலஸ்தீனம், பாபிலோன், எகிப்து, உரோமை மற்றும் கொரிந்து ஆகிய பல்வேறு இடங்களில் ஏறத்தாழ 1000 ஆண்டு அளவாக, குறிப்பாக கி.மு. 900 முதல் கி.பி. 150 வரை எழுதப்பட்டது. (லூசியன் லெக்ரான், 2006). திருவிவிலியம் இறைவனின் அன்பையும், இரக்கத்தையும், கடவுள் எவ்வாறு மனிதஉரு எடுத்து அனைவரையும் மீட்டார் என்ற மீட்பின் வரலாற்றையும் உரைத்தாலும் திருவிவிலியம் மத போதனைகளை மட்டும் கொள்ளாமல் மக்களது வாழ்விற்கு தேவையான அறிவுரைகளையும், நன்னெறி போதனைகளையும் கொண்டதாக அமைகிறது. இந்நூல்கள் அனைத்தும் பிற்கால தலைமுறையினருக்கு பயன்படும் நோக்கோடு இவை எழுதப்பட்டவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட இனமான இஸ்ரயேல் மக்களோடு கடவுள் கொண்ட உறவின் வரலாற்றை பழைய ஏற்பாடு எடுத்துரைக்கின்றது. பழைய ஏற்பாட்டில் 39 நூல்கள் எபிரேயத்திலும், 7 நூல்கள் கிரேக்கம் மற்றும் அரமாயிக் மொழிகளிலும், ஏறத்தாழ 900 ஆண்டுகளாக எழுதப்பட்டு வந்துள்ளன. பழைய ஏற்பாட்டில் உள்ள 46 புத்தகங்களையும் 4 பகுதிகளாக பிரிக்கலாம்.

1. திருச்சட்ட நூல்கள் -5
2. வரலாற்று நூல்கள் -16
3. ஞானநூல்கள் -7

4. இறைவாக்கினர் நூல்கள் -18

மொத்தம் -46 நூல்கள் (லூசியன் லெக்ரான், 2006).

புதிய ஏற்பாடு திருவிவிலியத்தின் இரண்டாவது பிரிவாகும். இது இறை மைந்தன் இயேசுவைப் பற்றியும் முதல் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை பற்றியும் கூறுகிறது. இதில் மொத்தம் 27 நூல்கள் உள்ளன. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. இதில் உள்ள 4 பிரிவுகள்.

| | | |
|---|---|---|
| 1. நற்செய்தி | - | 4 |
| 2. திருத்தூதர் பணிகள் | - | 1 |
| 3. திருமுகங்கள் | - | 21 |
| 4. திருவெளிப்பாடு | - | 1 |
| **மொத்தம்** | - | **27** |

மேற்கூறப்பட்ட திருமுகங்களில், பதின்மூன்று திருமுகங்கள் புனித பவுலடியாரால் எழுதப்பட்டவை. பவுல் பென்யமின் குலத்தைச் சேர்ந்த யூத குடும்பத்தில் கி.பி.10ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் இளமையிலேயே யூதச் சட்டங்களையும், நெறிமுறைகளையும் கற்றறிந்தார். உலகப் பொதுமொழியாயிருந்த கிரேக்கத்தையும் கற்றுத் தெளிந்தவர். எருசலேமில் புகழ் பெற்ற கமாலியேல் என்னும் யூத ரபியிடம் கல்வி பயின்றவர். தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துமு் கூட்டத்தில் இருந்தவர் இவர். கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் கிறிஸ்து அவரைத் தடுத்தாட்கொண்டார். சமயப்பற்றும் சட்டப்பற்றும் மிக்கவராகவும் இருந்த சவுல், மனம் மாறிய பின் கடவுளின் பேரருளைப் பறைசாற்றும் ஆர்வமிக்க தூதர் ஆனார். (அ.இயேசு மரியசூசை, 2009).

இக்கட்டுரையில் திருவள்ளுவரின் போதனைக்கும் புதியஏற்பாட்டின் ஓர் ஆசிரியரான புனித பவுலடியாரின் போதனைக்கும் உள்ள ஒருமித்த கருத்துக்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

**இறைவேண்டல்**

அனைத்திற்கும் ஆதியான இறைவனின் பாதத்தை அடைந்தவர்க்கு எக்காலத்திலும் பிறவி துன்பங்கள் இல்லை. புலன் வழியாக உண்டாகும் ஆசையை அடக்கி அறத்தை கடைப்பிடித்து நடப்பவர் சிறந்த துறவி என்று திருக்குறள் கூறுகிறது. இவ்வாறெல்லாம் ஒழுக்கத்தை உயர்வாக எண்ணி நடப்பவர்க்கு விண்ணுலக வாழ்வு நிச்சயம் என்றும் திருக்குறளின் தொடக்கத்திலேயே திருவள்ளுவர் இறைவனின் பாதத்தை தொழுது, அறம் பற்றியும் அறத்தினால் உண்டாகும் நன்மைப் பற்றியும் கூறி தொடங்குவார் திருவள்ளுவர். புனித பவுல் ஒவ்வொரு திருமுகத்தின் தொடக்கத்திலும் வாழ்த்துப் பகுதியில் இறைவனையும் தாம் யாருக்காக தனது மடலை எழுதுகிறாரோ அவர்களையும் வாழ்த்தி எழுதுகிறார். மேலும் கொலோசியருக்கு எழுதிய திருமுகத்தில் 1:15-17இல் அகரமும், னகரமுமான கடவுளைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். ‘அவர் கட்புலனாகாத கடவுளின் சாயல், படைப்பனைத்திலும் தலைப்பேறு ஏனெனில், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர். துலைமை தாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகிய

அனைவரும் அவரால் படைக்கப்பட்டன. அனைத்துக்கும் அவரால் படைக்கப்பட்டன. அனைத்துக்கும் முந்தியவர் அவரே, அனைத்தும் அவரோடிணைந்து நிலை பெறுகின்றன'.

**அன்புடைமை**

புனித பவுல் அன்பைப் பற்றி பேசும் போது கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் ஒரு அதிகாரம் முழுவதும் அன்பின் இலக்கணத்தை கற்பிக்கிறார். 'அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும் பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது அன்பு இழிவானதைச் செய்யாது, தன்னலம் நாடாது. எரிச்சலுக்கு இடம் கொடாது, தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும். அனைத்திலும் மனஉறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோம். பரவசப்பேச்சு பேசும் கொடையும் ஓய்ந்துபோம். அறிவும் அழிந்துபோம். ஆனால் அன்பு ஒருபோதும் அழியாது… ஆக நம்பிக்கை, எதிர்நோக்கு அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது'. (திருவிவிலியம், 1 கொரிந்தியர் 13).

**'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்'**
**(திருக்குறள், 71)**

'அன்பை தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியுமா? அன்புள்ளம் கொண்டவர்களின் சிறுகண்ணீரே அவர்களது அன்பினைப் பலர் அறிய வெளிப்படுத்தி விடும்' (இரா.நாராயணசாமி, 1997) மேலும் அடுத்து வரும் குறள்களில் 'உள்ளத்தில் அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே உரியது என்பர். ஆன்பு உடையவர் தம் உடம்பையும் பிறருக்கு உரியதாக்குவர். மனதில் அன்பில்லாதவர்க்கு இடம், பொருள், ஏவல் என்னும் புறத்து உறுப்புக்கள் என்ன உதவியைச் செய்யும்?' (இரா.நாராயணசாமி, 1997) என்று அன்பின் முக்கியத்துவத்தை திருவள்ளுவரும், புனித பவுலடியாரும் கூறுகின்றனர்.

அறன் வலியுறுத்தல்

**'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்'**
**(திருக்குறள், 305)**

ஒருவன் தன்னைத் துன்பத்திலிருந்து காத்துக் கொள்ள, கோபத்தை அடக்க வேண்டும். இல்லாவிட்டால், கோபித்தவனையே அது அழித்துவிடும்.

**'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**
(திருக்குறள் 314)

தமக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தல், அவர் வெட்கப்படும்படியான நன்மையை அவருக்கு செய்துவிட வேண்டும்.

**‘ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று’**
**(திருக்குறள் 323)**

ஒருவனுக்கு நல்லது பிற உயிர்களைக் கொல்லாதிருப்பது: அதைச் சார்ந்து நல்லதாக உள்ளது பொய் பேசாதிருப்பது.

இவ்வாறு மனிதன் தன் உணர்ச்சிகளை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இதனையே புனித பவுலடியார், ‘இப்பொழுது நீங்கள் சினம், சீற்றம், தீமை ஆகிய அனைத்தையும் அகற்றி விடுங்கள். பழிப்புரை, வெட்கக்கேடான பேச்சு ஆகிய எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. ஒருவரோடு ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில் நீங்கள் பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புனித மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள்’ (திருவிவிலியம், கொலோசியர் 3:8-10) என்றும், தீமையை நன்மையால் வெல் என்பைதை, ‘நீயோ, ‘உன் எதிரி பசியாய் இருந்தால், அவனுக்கு உணவு கொடு, அவன் தாகத்தோடு இருந்தால் அவன் குடிக்கக் கொடு. இவ்வாறு செய்வதால், அவன் தலைமேல் எரிதழலைக் குவிப்பாய். தீமை உங்களை வெல்லவிடாதீர்கள், நன்மையால் தீமையை வெல்லுங்கள்’ (திருவிவிலியம், உரோமையர் 12:20-21) என்றும் கூறுகிறார்.

**இல்வாழ்க்கை**

தன் துணைவியிடம் அன்பும், பிறருடன் பகிர்ந்துண்ணும் அறச்சிந்தனையும் இருப்பதே இல்வாழ்வின் பண்பும் பயனும் என்றும் அறவழியில் இல்வாழ்க்கை நடத்துபவன் தவத்தினால் பெரும் பயன் எதுவும் இல்லை என்றும் இல்வாழ்க்கையினை நடத்தும் முறையை பல குறள்களில் திருவள்ளுவர் கூறுகிறார். பவுலடியாரோ ‘கணவர் தம் மனைவிக்கு மண வாழ்க்கைக்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும், அதுபோல மனைவியும் தம் கணவருக்குக் கொடுக்க வேண்டும்’ (திருவிவிலியம், 1 கொரிந்தியர் 7-3) என்றும், ‘தமது சொந்தக் குடும்பத்தை நல்ல முறையில் நடத்தி, தம் பிள்ளைகள் பணிவுடனும் மிகுந்த கண்ணியத்துடனும் வளர ஆவன செய்பவராக இருக்க வேண்டும்’. (திருவிவிலியம், 1 திமோத்தேயு 3:4) என்றும் கூறுவார்.

**செங்கோன்மை**

*‘ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திருங்கள், ஏனெனில் கடவுளிடமிருந்து வராத அதிகாரம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள ஆட்சிப் பொறுப்புகளைக் கடவுளே ஏற்படுத்தினார்’.* (திருவிவிலியம், உரோமையர் 13:1). புனித பவுல் திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகம் முழுவதிலும் வழிபாடு, தலைமைப் பணி பற்றிய அறிவுரைகள், சபைக் கண்கணிப்பாளர்கள் பண்புகள், திருத்தொண்டர்கள், பண்புகள், திருச்சபையினருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தெளிவாக கூறுகிறார்.

துலைமையில் உள்ளவர்கள் *‘அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராக இருக்க வேண்டும்’* (திருவிவிலியம் 1, திமோத்தேயு 3:2) என்று புனித பவலடியார் கூறுவது குறிப்பிடத்தக்கது. இதனையே திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியலில் ஒழுக வேண்டிய அறங்களே நாட்டை நிலைநிறுத்துகின்றது என்றும், அரசன் சாதாரண மனிதனிலிருந்து வேறுபட்டு சிறந்த குணங்களும், பல்வேறு கடமைகளும் நிரம்பியவனாகக் காணப்பட வேண்டும் என்றும், அரசன் நியாயமாய் நீதி வழங்குகிறவனாகவும், கற்றறிந்தவனாகவும், சகிப்பு தன்மை, ஈகை ஆகியவற்றில் சிறந்தவனாகவும் காணப்பட வேண்டும் என்றும், மக்களும் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்தலும், அரசியல் அரண்களாகக் கூறுகிறார். உதாரணத்திற்கு பின்வரும் குறள்கைளைக் கூறலாம்.

**‘படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு’**

**(திருக்குறள் 381)**

படையும், குடியும், உணவம் அமைச்சும், நட்பும், பாதுகாப்பும் என்று சொல்லப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் சிங்கம் போன்றவன் (இரா.நாராயணசாமி, 1997).

**‘அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு’**

**(திருக்குறள், 382)**

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய நான்கு குணங்களும் குறைவற்றிருத்தலே அரசனுக்கு இயல்பாகும் (இரா.நாராயணசாமி, 1997).

**‘தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனான் பவர்க்கு’**

**(திருக்குறள் 383)**

விரைவும், கல்வியும், துணிவுடைமையுமாகிய மூன்று குணங்களும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டும். (இரா.நாராயணசாமி, 1997)

**காதற்சிறப்பு**

காமத்துப்பால், காதல் கவிதைகளையும், தலைவன் தலைவிக்கு இடையே உள்ள காதல், ஊடல் கூடல் இல்வாழ்க்கையின் தூய்மை சிறப்பை கூறுவதாகும். திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் இனிமைமிகு பாடலானது ‘ஆண் பெண் இருவருக்கும் நடுவில் முகிழ்க்கும் இயல்பான காதலுணர்வை இருவரும் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் கவிதைகள் அல்லது கூற்றுக்களாகும். இப்பாடல்களானது கடவுளுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே உள்ள அன்புறவை வர்ணிப்பவை என்பவர் சிலர்.’ (திருவிவிலியம், 2013) பவுலடியார் கணவன் மனைவி தங்களுக்கிடையே எவ்வாறு உண்மையாக இருக்க வேண்டும் என்பதை ‘உலகப் போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள்’

(திருவிவிலியம், கொலோசேயா் 3:5) என்று கூறினாலும் ஆணுக்கும், பெண்ணுக்குமான காதலுணா்ரவை இவா் எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

முடிவாக தூய பவுலடியாரும் திருவள்ளுவரும் தங்களது வாழ்வில் கற்றறிந்த அனுபவித்தறிந்த உண்மைகளை மக்களிடையே பகிர்ந்தவா்கள். இருவருமே அறத்தை வலியுறுத்துபவா்களாகவும் தீமையை சுட்டிக்காட்டி எவ்வாறு நல்வழியில் வாழ வேண்டும் என்றும் அறிவுறுத்துபவா்களாகவும் இருந்தவா்கள். யாதொருவன் தன் ஐம்புலன்களை அடக்கி, மற்றவா் நலனில் அக்கறை கொண்டு நற்பண்புகளில் சிறந்து, நல் இல்லவாழ்க்கையில் ஈடபடுகிறானோ அவனே என்றும் இறைவனின் முன்னிலையில் வாழும் தகுதி பெற்றவன். திருவள்ளுவனால் தமிழருக்கு பெருமை என்பது போல பவுலடியாரால் எபிரேயருக்கும், எபிரேயா் அல்லாத மற்ற கிறிஸ்தவர்களுக்கும் பெருமை. திருக்குறளை உலகினுக்கு தந்த பெருமை புனித பவுலடியாரேயேச் சாரும். இவ்வாறு பல ஒருமித்த கருத்துக்களை திருக்குறளிலும் புனித பவுலடியார் எழுதிய திருமுகங்களிலும் காணலாம்.

**துணைநூற்பட்டியல்**

**புத்தகங்கள்**

1. Thiruviviliyam, Tamil Nadu Biblical Catechetical & Liturgical centre, Tindivanam, 2013.

2. செல்லத்துரை, விவிலியமும் தமிழ் இலக்கியமும், அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி, 2004.

3. நாராணயசாமி இரா, திருக்குறள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1997.

4. தில்லைநாதன்.சி, வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, தமிழ் புத்தகாலயம், சென்னை, 1967.

5. இயேசு மரிய சூசை.அ, திருத்தூதா் புனித பவுலடியாரின் திருமுகங்கள், ஏஞ்செல்ஸ், சென்னை,2009.

6. லூசியன் லெக்ரான், கிறிஸ்துவுக்குள் வாழ்வு, தூய பேதுரு தமிழ்க் கழகம், பெங்களூா், 2006.

**கட்டுரைகள்**

1. John jebaraj.M, A Comparative Study of the Ethical Values of Thirukkural and the bible, 2007.

2. Chelliah, S, The Proverbs and Tirukkural as 'Immortal Pieces of Proverbial Literature' : A Brief Analysis, 2017.

**இணையதள முகவரிகள்**

1.,http://ijrar.com/upload_issue/ijrar_issue_339.pdf.

2. <http://shodhganga.inflibnet.ac.in/handle/10603/103046>

3. <https://www.ytamizh.com/thirukural/kural-323/.